# சுவிசில் வேலைசெய்வதற்கும், கற்பதற்குமான அணுகுமுறை

சுவிசில் வசிக்கும் வயதுவந்தவர்களுக்கான தகவல்கள்

நீங்கள் உங்கள் பாடசாலைக்கல்வியையும், தொழிற்கல்வியையும் வெளிநாட்டில் மேற்கொண்டுள்ளதுடன், சுவிசில் வேலை தேடுகின்றீர்களா? அல்லது சுவிசில் நீங்கள் தொடர்ந்து கற்க விரும்புகின்றீர்களா? இப்பிரசுரத்தில் சில முக்கியமான தகவல்களை நீங்கள் பெறலாம். இத்தகவல்கள் உங்களிற்கு வேலையை அல்லது தொடர்ந்து கற்கும் சாத்தியங்களைத் தேடுவதற்கு உதவும் முதற்படியாக இருக்கக்கூடும்.

## „Parlez-vous français?“ „Verstehen Sie Deutsch?“ „Parla italiano?“

**„பிரெஞ்சுமொழி கதைப்பீர்களா?“ „ஜெர்மன்மொழியைப் புரிந்துகொள்வீர்களா?“ „இத்தாலிமொழி கதைப்பீர்களா?“**

எதுஎவ்வாறாயினும், நீங்கள் ஒரு வேலையைத் தேடுவதாக அல்லது ஒரு தேர்ச்சிக்கல்வியை கற்க விரும்புவதாக இருந்தால்: முக்கியமான நிபந்தனைகளில் ஒன்று அந்த பிரதேசமொழி[1] அறிவு அவசியம். ஒருவேளை நீங்கள் ஜெர்மன்மொழி பேசும் பிரதேசத்தில் இருந்தால்: எழுத்துமொழியுடன் ஆரம்பியுங்கள்! இதனூடு பின்பு நீங்கள் பேச்சுமொழியான சுவிஸ் ஜெர்மன்மொழியை விளங்கிக்கொள்ளவதற்கும் அல்லது கதைப்பதற்கும் ஓர் அடிப்படையைப் பெறுவீர்கள்.
ஓர் உதவிவேலைக்கு மேற்குறிப்பிட்ட மொழிகளில் தேவையானதை புரிந்துகொள்ளவும், சிறிதளவு கதைக்கவும் முடிந்தால் போதுமானது. ஆனால் இப்பொழுது அதிகமாக உதவிவேலைகளில் கூட உங்களிற்கு சிறிதளவு வாசிக்கவும், எழுதவும் முடியவேண்டும் என்பதும் எதிர்பார்க்கப்படுவதுடன், கூடிய தகமைகள் எதிர்பார்க்கப்படும் வேலைகளுக்கு நீங்கள் மேலும் அதிகமான மொழியறிவைக் கொண்டிருக்கவேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. ஓர் தொடர்ந்த கற்றலுக்கு அல்லது பட்டப்படிப்பிற்கு நீங்கள் கடினமான பந்திகளை வாசிக்கவும், விளங்கிக்கொள்ளவும் அத்துடன் தானே எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்: உங்கள் குறிக்கோளிளைப் பொறுத்து நீங்கள் வெவ்வேறு மொழியறிவு நிலையை அடைந்து இருக்கவேண்டும். எனவே உங்கள் குறிக்கோளை அடைவதற்கு எம்மொழியறிவு நிலை தேவை என்பதை நீங்கள் தெரிந்து வைத்திருப்பது அவசியம்.
மேலதிகமாக: சுவிசில் தொழிலுக்கு அல்லது தொடர்ந்து கற்றலுக்கு மட்டும் மொழி அவசியமில்லை. அத்துடன் மொழியறிவு உபயோகமானது: உங்களால் அயலவர்களுடன் உரையாடுவதற்கு, பொருட்களை வாங்குவதற்கு, உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் அல்லது வைத்தியருடன் உரையாடமுடியும், படிவங்களை நிரப்புவதற்கு, அலுவலகங்களுடனும், மேலதிகாரிகளுடனும் தொடர்புகொள்வதற்கு போன்றவை. மற்றும் நீங்கள் ஒருசில வருடங்களின் பின்னர் ஒரு தொழிலைத் தேட விரும்பினால் அல்லது தேடவேண்டுமானால், நீங்கள் ஏற்கனவே முதலாவது முக்கியமான அடியை மேற்கொண்டுள்ளீர்கள்!

மொழிவகுப்புகளின் ஓர் மேலோட்டமான பார்வையை நீங்கள் இணையத்தளத்தில்[2] பெறலாம். மொழிவகுப்புகள் தொடர்பான மேலதிக தகவல்களை நீங்கள் உங்களுடைய தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்திலும் பெறலாம். தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் தொடர்பான விபரங்களை இத்தகவலின் இறுதிப்பக்கத்தில் பார்க்க.

### வேலை தேடுபவர்களுக்கு குறிப்புகள்

நீங்கள் எந்த வெளிநாட்டவருக்குரிய வதிவிட அனுமதியை வைத்துள்ளீர்கள் என்பதும், எத்தகமைகளை நீங்கள் கொண்டுள்ளீர்கள் என்பதும் வேலை தேடுபவர்களுக்கு முக்கியமானது. அத்துடன் மேற்குறிப்பிட்ட விடயத்துடன் தொடர்பில்லாது, சுவிசில் ஒரு வேலையைக் கண்டுபிடிப்பதும் விசேடமாக நீங்கள் இதுவரையும் எங்கும் வேலை செய்யாதவராக இருந்தால், ஒவ்வொரு வர்த்தகத்துறையைப் பொறுத்தும் கடினமான நிலைகள் உள்ளன. எனவே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சுவிசில் வேலை அனுபவங்களைச் சேகரியுங்கள்: உதாரணமாக ஒரு பயிற்சிநிலை அல்லது ஒரு வேலை, சிலவேளைகளில் நீங்கள் நல்ல கற்கையை மேற்கொண்டவர்களாக இருந்தாலும். சிலவேளைகளில் அதே நிறுவனத்தில் பின்னர் ஓர் நல்ல வேலையைப் பெறக்கூடும். அல்லது பயிற்சிநிலையில் நீங்கள் ஒரு நல்ல வேலைசெய்யும் நிலைச் சான்றிதழைப்

[1] சுவிஸ் நான்கு மொழிகளை அரசமொழியாகக் கொண்டுள்ளது: ஜெர்மன்மொழி, பிரெஞ்சுமொழி, இத்தாலிமொழி, ரோமானியமொழி

[2] இணையத்தளத்தில் மொழிவகுப்புகள் www.w-a-b.ch

பெறக்கூடும். இச்சான்றிதழுடன் பின்னர் நீங்கள் விண்ணப்பிக்கும்போது நல்ல சந்தர்ப்பத்தைப் பெறுவீர்கள்! மேலும் ஊதியமற்ற வேலைகளும் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கக்கூடும், இங்கு வேலை அனுபவங்களைச் சேகரிப்பதுடன், மக்களையும் தெரிந்துகொள்வீர்கள், சிலவேளைகளில் இவர்கள் உங்களிற்கு வேலைதேடுவத-ில் உதவக்கூடும்.உங்கள் உறவினர்கள், சிநேகிதர்கள் மற்றும் தெரிந்தவர்களிற்கு நீங்கள் வேலை தேடுவதைக் கூறுங்கள். சிலவேளைகளில் அவர்களின் நிறுவனத்தில் திடீரென்று ஓர் வெற்றிடம் ஏற்படலாமா? அல்லது இந்த சிநேகிதர்கள் ஒரு வெற்றிடத்தை அறிந்தவரைத் தெரிந்துள்ளனரா? சுவிசில் மிக அதிகமான மக்கள் அவர்களின் வேலையை ஒரு பத்திரிகை விளம்பரத்தினூடு பெறுவதில்லை. மாறாக அவர்களிற்குத் தெரிந்தவர்கள் வட்டத்தில் வேலையைப்பற்றி தெரிவிப்பதூடு!

நீங்கள் வேலை தேடுபவராக இருந்தால் பிரதேச தொழில் நடுவகத்தை[1] அணுகுங்கள். முகவரியை உங்கள் கிராமசபையில் பெற்றுக்கொள்ளலாம். பொதுவாக தொழில் நடுவகம் வேலை வெற்றிடங்களின் தகவல்களை வெளியிடும், மேலும் வேலை தேடுபவர் அங்கு ஆலோசனையைப் பெறுவதற்கும் உரிமையுண்டு.

## வெளிநாட்டுப் பட்டத்தை அங்கீகரிப்பதற்கு அனுமதித்தல்

நீங்கள் உங்கள் நாட்டில் ஓர் தேர்ச்சிக்கல்வியைப் பட்டத்துடன் அல்லது டிப்ளோமாவுடன் முடித்துள்ளீர்களா? இப்பட்டத்தை நீங்கள் இங்கு சரிபார்க்க முடியும். அத்துடன் உங்கள் பட்டம் அல்லது டிப்ளோமா இங்கு என்ன தகமையைக்கொண்டுள்ளது என்பதை அறியலாம். இது சமமாக மதிப்பிடப்பட்டாலுங் கூட, உங்கள் தொழிலுக்கான ஓர் இடத்தைப் பெறுவதற்கு உத்தரவாதமில்லை. விசேடமாக உங்களிற்கு சுவிசில் தொழில் அனுபவம் இல்லாததால்.
ஆனால் நீங்கள் ஒரு முக்கியமான அடியை எடுத்து வைத்துள்ளீர்கள். அல்லது ஒரு தொடர்கல்வியை மேற்கொண்டு உங்கள் வெளிநாட்டு கல்வித்கமையை மேலும் வளர்த்து ஒரு சுவிஸ் கல்வித்தகமையை அடையலாம்.
அரச தொடர்பு நிலையங்களிடம் அணுகுங்கள்.[2] இங்கு நீங்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை அறிவீர்கள்.

## சுவிசில் கல்வி மற்றும் தொழிற்கல்வி முறைகள்

சுவிசில் ஒரு தொழிலைக் கற்கும் வழி உங்கள் தாய்நாட்டில் இருந்து மிகவம் வேறுபட்டது. இங்கு ஒரு சிறிய அளவிலான தொழில்களை மாத்திரமே மத்தியதர நிலைப்பாடசாலைகளிலும் அதன் பின்னர் பல்கலைக்கழகங்களிலும் பயில்வதால் பெறமுடியும். அநேக சுவிஸ் இளம்வயதினர் கட்டாய பாடசாலையின் பின்னர் அடிப்படைத் தொழிற்தேர்ச்சிக் கல்வியொன்றைக் கற்கின்றனர்: இவர்கள் மூன்று தொடக்கம் நான்கு வருடங்கள் தங்கள் தேர்ச்சிக்கல்வியின் போது ஒருபுறம் ஒரு நிறுவனத்திலும்(பயிற்சி) பயில்வதுடன், மறுபுறம் பாடசாலைக்கும் செல்வர். அங்கு அறிமுறையைக் கற்பர். சுவிசில் ஏறத்தாள 250 தொழில்கள் கட்டாய பாடசாலையை நிறைவு செய்ததன் பின்னர் கற்கக்கூடியதாக உள்ளன. இவ்வடிப்படை தொழிற்தேர்ச்சிக் கல்வியின் பின்னர் ஒவ்வொரு தொழிலுக்கும் பல தொடர்ந்து கற்கும் சாத்தியங்கள் உள்ளன. உங்கள் தொழிலை எவ்வழியில் சுவிசில் கற்கின்றனர் என்பதை அறிந்துகொள்ளுங்கள். அதனூடு எவ்வகையான தொடர்கற்றல்கள் உங்களுக்கு உண்டு என்பதையும், அத்துடன் எத்தொழிற் பகுதியில் நீங்கள் ஒரு தொழ-ிலைத் தேடமுடியும் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள்.
„பாடசாலையின் பின்னர் என்ன?“ எனப்படும் கையேடு சுவிஸ் கல்விமுறையைப் பற்றிய ஓர் நல்ல பார்வையைத் தரும். இக்கையேடு பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பொதுவாக இதை நீங்கள் தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் பார்வையிடுவதுடன், இரவலாகவும் பெறலாம்.

## வளர்ந்தோருக்கு தொழிற்தேர்ச்சித் தகமை

வளர்ந்தோர் ஒரு தொழிற்தேர்ச்சித் தகமையை அடைவதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் உள்ளன. இவற்றை தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் கேட்டு அறிந்துகொள்ளுங்கள்.

---

1

| | |
|---|---|
| ஜெர்மன்மொழி பேசும் சுவிஸ்: | Regionales Arbeitsvermittlungszentrum (RAV); www.treffpunkt-arbeit.ch |
| பிரெஞ்சுமொழி பேசும் சுவிஸ்: | Office régional de placement (ORP); www.espace-emploi.ch |
| இத்தாலிமொழி பேசும் சுவிஸ்: | Ufficio regionale di collocamento (URC); www.area-lavoro.ch |

2 031 322 21 29;
www.bbt.admin.ch >Deutsch >Anerkennung ausländischer Diplome >Merkblatt
www.bbt.admin.ch >Français >Reconnaissance de diplômes et de certificats étrangers >notice d’information
www.bbt.admin.ch >Italiano >Riconoscimento dei diplomi e dei certificati esteri >promemoria

### ஒரு பட்டப்படிப்பிற்கு அல்லது வேறு தொடர்கல்விகளுக்கான நிதியளிப்பு

ஒருவேளை நீங்கள் ஒரு தொடர்கல்வியை அல்லது பட்டப்படிப்பை மேற்கொள்வதில் ஆர்வமுள்ளவராக இருந்தால், நிதியளிப்பு தொடர்பாகவும் நீங்கள் சிந்திக்கவேண்டும்! சுவிசில் கற்பவர்கள் அநேகமாக அவர்களின் பெற்றோர்களிடம் இருந்து உதவிபெறுபவர்களாக அல்லது தங்கள் தேர்ச்சிக்கல்விக்கு, தொடர்கல்விக்கு அல்லது பட்டப்படிப்பிற்கு தாமே நிதியளிக்ககூடியவாறு கற்றலுடன் வேலைசெய்பவர்களாகவும் உள்ளனர். குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் மட்டும் உதவிப்பணம் பெறமுடியும்.[1]

### தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தின்[2] பல்வேறு வழங்கல்கள்

நீங்கள் தொழிற்தேர்ச்சிக்கல்வி வழியைப் பற்றி அறிவதற்கு விரும்பினால் அல்லது நீங்கள் கற்ற தொழிலை சுவிசில் மேற்கொள்வதையிட்டு சிந்தித்தால், தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தை அணுகவேண்டும். தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் அனைத்து தொழிற்தேர்ச்சி கல்விகளினதும், தொழில்களினதும் தகவல்களைப் பெறுவீர்கள். தொழிற்கல்வி ஆலோசனை நிலையங்கள் தகவற்சாலைகளைக் கொண்டுள்ளன. இத்தகவற்சாலைகள் வாசிகசாலைகள் போன்று தொழிற்படும்: நீங்கள் இது திறந்திருக்கும் நேரங்களில் முன்னறிவித்தலின்றி அங்கு சென்று, பல்வேறு தொழில்களையும், தேர்ச்சிக்கல்விகளையும் பற்றிய தகவல்களைப் பெறுவதுடன், பொதுவாக தகவலளிக்கும் உபகரணங்களையும் இரவலாகப் பெறமுடியும். தகவற்சாலைகளில் அநேக பல்வேறு விடயங்கள் தொடர்பான, உதாரணமாக உங்கள் பிரதேசத்தில் உள்ள ஆலோசனை மையங்களின் முகவரிகள் போன்ற தகவற்பிரசுரங்களும், உபகரணங்களும் உள்ளன. இவ் உபகரணங்களை பிரசேதமொழியில் பெறமுடியும். குறைந்தளவு தகவல்கள் மட்டுமே பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன!
ஒருவேளை உங்களால் இத்தகவற்சாலையில் தனியாக விபரங்களைப் பெறமுடியாது இருந்தால், உங்கள் தொழில் நிலைமையையிட்டு ஒரு வல்லுனருடன் கதைப்பதற்கு, நீங்கள் உங்களுக்கு ஒரு தனிப்பட்ட ஆலோசனைக்கு(விண்ணப்பம் தகவற்சாலையில் அல்லது தொலைபேசி மூலம்) விண்ணப்பிக்கமுடியும். இக்கலந்துரையாடல் அந்தப்பிரதேசமொழியிலேயே நடைபெறும்(வேறு மொழிகளைப் பற்றி விசாரியுங்கள்). தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் தொழில் பெறுவதற்கான இடங்களைத் தேடித்தராது. ஆனால் நீங்கள் தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் ஒரு வல்லுனரின் உதவியுடன் தொழிற் சாத்தியங்களைக் கதைக்கலாம் அல்லது புதிய எண்ணங்களை தேடலாம் அல்லது நீங்கள் வல்லுனரின் உதவியுடன் உங்களுக்குப் பொருத்தமான ஒரு தொழிலை அல்லது தொழிற்தேர்ச்சிக்க கல்வியை பெறுவதற்கான வழியைத் திட்டமிடலாம்.

சுவிசில் வேலைசெய்வதற்கும், கற்பதற்குமான அணுகுமுறை உங்களிடம் இருந்து அதிக பொறுமையையும், காலத்தையும் எதிர்பார்க்கும்!

---

[1] மேலதிக தகவல்களை தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் அல்லது இணையத்தளத்தில்:

| | | |
|---|---|---|
| சுவிசின் ஜெர்மன்மொழி பேசும் பகுதிக்கு | தொடர்கல்வி | www.berufsberatung.ch/dyn/1385.asp |
| | மேற்கல்வி | www.berufsberatung.ch/dyn/2680.asp |
| சுவிசின் பிரெஞ்சுமொழி பேசும் பகுதிக்கு | | www.orientation.ch/dyn/1157.asp |
| சுவிசின் இத்தாலிமொழி பேசும் பகுதிக்கு | | www.orientamento.ch/dyn/1513.asp |

[2] ஒவ்வொரு மாநிலத்திலும் ஆகக்குறைந்தது ஒரு தொழில் ஆலோசனை இருக்கும்.
முகவரிகளை பாடசாலையில், கிராமசபையில் அல்லது பின்வரும் இணையத்தில் பெற்றுக்கொள்ளலாம்: றறற.ளளடி-யளழளி.உா.

தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் பொருவாக ஒரு விசேட பெயரில் அல்லது அதன் சுருக்கத்தில் நன்றாக அறியப்பட்டிருக்கும்:

| | |
|---|---|
| சுவிசின் ஜெர்மன்மொழி பேசும் பகுதியில் | BIZ, Laufbahnzentrum |
| சுவிசின் பிரெஞ்சுமொழி பேசும் பகுதியில் | OP, OSP, OROSP, CIO, CIP, OOFP |
| சுவிசின் இத்தாலிமொழி பேசும் பகுதியில் | orientamento, UOSP |